ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2312/41 - 2022 දෙසැම්බර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.29
2312/41 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

**அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்**

01. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் 1 ஆவது பந்தியின் நியதிகளுக்கு அமைவாகக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல.1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் 1 ஆம் பகுதியில், இல 21 மற்றும் 22 இன் கீழ் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கி 2022.12.23 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் அவ் அட்டவணையின் பகுதி 1 இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.

02.

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 21. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின்,<br><br>(அ) நாடளாவிய சேவைகளைச் சாராத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிகள் 218 தொடக்கம் 222 வரையான ஏற்பாடுகள் பிரகாரம் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் |

1A - G 38483 — 07 (2022/12)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| (ஆ) அமைச்சின் கீழ் வராத, பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த / விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | | (II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு. |
| | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் / மேலதிக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக மாவட்டங்களுக்கு இடையில் இடமாற்றம் செய்தல்.<br><br>(II) அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிகள் 223 பிரகாரம் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் |
| 22. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின்,<br><br>(அ) இணைந்த சேவைகளைச் சாராத பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சாராத / விசேட தரத்தைச் சாராத உத்தியோகத்தர்கள் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் /சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு.<br><br>(II) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல். |
| | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் / மேலதிக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிகள் 218 தொடக்கம் 222 வரையான ஏற்பாடுகள் பிரகாரம் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் |
| | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் /கமநல அபிவிருத்தி ஆணையாளர் (மனிதவள அபிவிருத்தி) | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக மாவட்டங்களுக்கு இடையில் இடமாற்றம் செய்தல்.<br><br>(II) அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்குவிதிகள் 223 பிரகாரம் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் |

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | ஏற்புடைய நிர்வாக மாவட்டத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி பிரதி/ உதவி ஆணையாளர் | (II) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக மாவட்டத்திற்குள் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களுக்கு இடையில் இடமாற்றம் செய்தல். |

03. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட இல.1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**எம்.ஏ.பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில்.
இல, 1200/9, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2022, திசெம்பர் 23.

EOG 12 - 0397/1

---

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்**

01. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் 1 ஆவது பந்தியின் நியதிகளுக்கு அமைவாக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட இல.1941/41 மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் 1 ஆம் பகுதியில், இல 23 மற்றும் 24 இன் கீழ் புதிய ஏற்பாடுகளை உள்ளடக்கி 2022.12.23 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் அவ் அட்டவணையின் பகுதி 1 இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.

02.

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 23. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் (இணைப்பு (II) இல் பொருள் கோடபப்பட்டுள்ள,<br><br>(அ) நாடளாவிய சேவைகளைச் சாராத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த / விசேட தரத்தைச் சேரந்த உத்தியோகத்தர்கள்<br><br>வகிக்கும் பதவிகளுக்குச் சமமான பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் சமுர்த்தி அபிவிருத்தி சட்டத்தின் 44 (உ) IV ஆம் பிரிவின் கீழ் நியமனங்களைப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள் | சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br><br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு. |
| 24. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இன் (இணைப்பு (II) இல் பொருள் கோடபப்பட்டுள்ள,<br><br>(அ) அதியுயர் தரத்தைச் சாராத /விசேட தரத்தைச் சாராத, மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள்<br><br>வகிக்கும் பதவிகளுக்குச் சமமான பதவிகளைப் பெற்றுக் கொள்ளும் சமுர்த்தி அபிவிருத்தி சட்டத்தின் 44 (உ) IV ஆம் பிரிவின் கீழ் நியமனங்களைப் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள் | சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள் /சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு.<br><br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்.<br><br>III. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல். |

03. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட இல.1941/41 மற்றும் 2015.11.20 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**எம்.ஏ.பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தில்.,
இல, 1200/9, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2022, திசெம்பர் 23.

EOG 12-0397/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.